
கண்ட ஆனந்தம்! 1
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# கண்ட ஆனந்தம்!

# 1

**வெளியீடு :**
**அன்பின் குடில்,**
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
**கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,**
**அந்தியூர் தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,**
தமிழ்நாடு - 638 311
**தொலைபேசி : (04256) 227655**
**மின் அஞ்சல் : anbinkudil@yahoo.co.in**

**முதற்பதிப்பு தை 2015**

**பிரதிகள் : 300**

**அட்டைப் படம் : ஏழுமலை**

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர் - 560 003.
தொலைபேசி : (080) 23346025

# பொருளடக்கம்


1. அன்னையும் பிதாவும் தெய்வம் ......................... ௩

௨. அந்தரங்க(ன்) ரகஸ்யம் ......................... ௯

௩. நம்பிக்கை ...................... ௨௨

௪. ஒரு கேள்வி ........................................... ௩௨

௫. ௧௮வது பாடலுக்கு விளக்கம் .............................. ௩6

6. பக்தீ ....................................... 50

7. ஞானம் ................................................. 67

௮. கண்ணனுடன் உரையாடல் ............................... ௮௯

௯. ஓர் முக்கிய உணர்வு ............................... 106

உ



ஸாந்தி!
ஸாந்தி!!
ஸாந்தி!!!

ஸத்தியம் பேசு.

ஸத்திய வாக்கை தர்மம் செய்.

ஸாந்தி! ஸாந்தி! ஸாந்தி!

ஓம்

ஸாந்தி! ஸாந்தி! ஸாந்தி!

நாவை அடக்கு. கருணையோடு இரு.

அடங்கு, அடக்காதே.

எல்லாம் நலம் எண்ணின நலம் வருவாய்.

யாம் இருக்க பயமேன்?

உ



உ

ஸாந்தி!
ஸாந்தி!!
ஸாந்தி!!!

ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை!

தெய்வம் மறையாறும்!

(நோயில்) ,, தோன்றாத் துணைவன்!

நம்பினோர் கெடுவதில்லை!

யத்பாவம் தத் பவதி!

ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம்!

அகம் பிரம்மம் ஜெகம் பிரம்மம் அகமே ஓம்!
எல்லாம் ஜகம், பரமும், ஜீவர்களும், ஓம்!
சிறிதும் இல்லை!

— தஞ்சை பாபா.



“அன்னையும் / பிதாவும் (நம்) முன்னறி(யும்)
தெய்வம்”, என ஆன்றோரின் வாக்கு.
“தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை.”
என்றும் “தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.”
நம் ஆன்றோர் வாக்கு அமைந்திருக்கிறது
” இம்மூன்றையும் அறிவூன்றி விசாரித்தால்,
உலகியல் தர்மம் எப்படி அமைந்திருக்கிறது
என விளங்கும்.

நம் கர்மா தூலத்தை முதலில் நம்
பிதா கொடுக்க, பின் நம் அன்னை அதை உரு
கும்
வாக்க, மாபெரும் உபகாரம் செய்தவர்களை
நம் கண்களால் காணும் நிலையிலும், நம்மோடு
நேருக்கு நேர் பேசும் நிலையிலும், அப்போ
தைக்கப்போது நம் தேவைகள் பூர்த்தி
செய்யும் நிலையிலும், நம்மோடு நடமாடும்
நிலையிலும், நாம் அழைத்தவுடன் உடனே



4

வருபவர்களாகவும், நம் அன்னையும்!
தந்தையும் வைதீக தெய்வமாக!

குடும்
அமைந்திருக்கிறார்கள் என்பது பேருண்மையாக
வைதீக தர்மமாக நம் அன்னையையும், நம்
தந்தையையும், போற்றி, பணிந்து, பாதுகாத்து
சேவை செய்து வந்தால் போதும். நம் வைதீகம்
நம் தெய்வீகத்தோடு இணைந்து விடும். இது சத்தியம்.
இங்கு அவ் இருவரும் நம் சாமான்ய குரு எனஆகிறார்கள்.
காரணம்:- ஸ்ரீ அன்னை! இவர் தான் உன் தந்தையென
தந்தையை சுட்டிக் காட்டும் நிலையிலும், ஸ்ரீ தந்தை! இவர் தான்
உன் குரு என குருவை சுட்டிக் காட்டும் நிலையிலும்,
இருவரும் குருஸ்தானம் பெறுகிறார்கள் என அறிக!

5



A) தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை.
10 மாதங்கள் தானே சுமந்து, கருவுக்குள்ளேயே வளர்த்து, பெற்றெடுத்து தன் உதிரத்தையே அமுதாக கொடுத்து, கண்ணின் கருக்கும் இமை போல காத்து வளர்க்கும் அந்த தாய்க்கு ஈடு இணை இங்கு எதுவும், எவரும் இல்லை என்றே சொல்லலாம். அவள் வாக்குக்கு மதிப்பு & மரியாதை கொடுக்க வேண்டும். அதை மீறினால் இங்கு நமக்கு இருப்பு இல்லை என்பதே சத்தியம்.

B) தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
தந்தை வாக்கே வேத வாக்காகும். நம் தந்தை அறிவே வடிவானவர். தாய் அன்பின் வடிவானவர். தந்தை சொல் சற்று கடினமாகவே இருக்கும்.



விழுங்க முடியாமல் உமட்டும்
உண்மைகள் எப்பவும் கசப்பாகவே இருக்கும்.
ஜீரணித்துக் கொண்டால் நாம் சுகம் பெறுவாம்.

ஆரம்பம் சற்று கடினமே. சகித்துக் கொண்டால்
ஆனந்தமே.
நீச்சல் பழகும் போது எவ்வளவு கடினமோ?

பழகி விட்டால் எத்தகைய ஆனந்தமோ?
அத்தகையதாகும்.
தந்தையின் வாக்கு. சகிப்புத்தன்மையே மிகவும் முக்கியம்.

ஸ்ரீமாதா பிதா தெய்வம் என்பது ஏது என்றால்?
லௌகீக தாய் தந்தையர் சர்வசாதாரணமே.
தெய்வீக தாய் தந்தையர் வெகு வெகு ஆனந்தமே.



7

(A) தெய்வீக தாய் தந்தையர் :- இறைவழியாகிய ஆன்மீகத்திற்கு (பக்தி & முக்திக்கு) உறுதுணையாக இருப்பர். இவர்களே தெய்வீகத் திருவுருவாகவும் குருவும் ஆவார்கள்.

(B) லௌகீக தாய் தந்தையர் :- படிப்பு / பட்டம் / பதவி / பேர்புகழ் / முதலிய(வற்றின்) பணத்திற்கு (உலக வாழ்க்கைக்கு) உறுதுணையாக இருப்பர். அவர்கள் தாய் & தந்தை அல்ல. மம்மி டாடி

(அம்மியும் ஆட்டுக்கல்லும் & தாடியும் கேடியும்) ஆவர்.



உ

அவ்விருவரும் தானும் அறியாமை
சேற்றில் விழுந்து, தம்முடைய
குழந்தைகளையும் அச்சேற்றில்
ஆழ்ந்து போதவழிகாட்டுகின்றனர்.

கலியுகம் நாகரீகம் என்ற
போதையில் ஆழ்த்திக்கொண்டிருக்கிறது.

ஆன்மீகம் என்பது சாதனையாக இல்லாமல்,
[illegible]
[illegible]
வாழ்வாகி விட்டதனை அறிக
கலியுகம் இப்படித்தான் இருக்கும்.



# அந்தரங்கன் ரகஸியம்.

## ஸ்ரீ அக்ரூரர் கோகுலம்

செல்கிறார். கம்சனின் ஆணையின்படி.
கண்ணனையும் பலராமனையும் அழைத்துக்
கொண்டு, ரதத்தில் மதுரா புறப்படுகிறார்.
பிருந்தாவனத்தில் ரதம் வரும் சமயம்
கோப கோபியர்கள், ரதத்தை வழிமறிக்
கின்றனர். தேர்ச்சக்கரத்தின் முன்னும்,
குதிரைகள் முன்னும் அமர்ந்த நிலையிலும்
அக்ரூரரின் பாதங்களைப் பற்றிய நிலை
யிலும், அழுத கண்ணீருடனும்,

தொழுதகைகளுடனும், குரல் கொடுக்கின்றனர்.



10

# நாவு தழுதழுக்கிறது. குரல் குழறுகிறது. வார்த்தைகள் சரிவர வரவில்லை.

ஐயா! அக்ரூரரே எங்கள் கண்ணனை எங்கு கூட்டிச் செல்கிறீர்? எங்கள் கண்ணனை விட்டு விடும். எங்கள் கண்ணன் இல்லாமல் உறவு, உணவு, உறக்கம், இல்லை. எங்கள் பிராணனை வேண்டுமானால் எடுத்துச் செல்லுங்கள். எங்கள் கண்ணனை மட்டும் விட்டு விடுங்கள்.

என இன்னும் பலவிதமாக அழுது புலம்புகின்றனர் கோபகோபியர். அக்ரூரரின் கண்களிலும் கண்ணீர் பெருக்கெடுத்து ஓட உண்மை உணர்வில் இப்படி எண்ணுகிறார்

அறியாமையின் உள்ளங்கள் கண்டு ஏங்கி வருந்துகிறார்

அக்ரூரர்.



11

அக்ரூரரின் எண்ணம்:— யாமாவது கண்ணனை அழைத்துச் செல்வதாவது? கண்ணனன்றோ எம்மை இழுத்துச் செல்கிறான். கர்ம காரியங்களை ஓர் பழுதின்றி முடிக்க, அவன் தானே தம்மாயாவால் செயல்படுகிறான். அவன் செயல்படவில்லையானால் இச்ஜீவர்கள் நிலை என்னவாகும்? எல்லாமே ஸ்தம்பித்து விடுமே? எல்லோருமே மன நானெனதின் உந்துதலினால் தாவ கர்மாவை மாற்ற எண்ணுகின்றனர். ஆனால் அவன் வினை என்ற பாரத்தை, விதி என்ற கயிற்றால் கட்டி, தம்மாயா என்ற சூட்சுமத்தால் எந்த பாரபக்ஷ தோஷமில்லாமல் திட்டமிட்டதை திட்டமிட்டபடி; காலச் சக்கரத்தை ஒழுங்காக சுழல வைத்தபடி, கண்காணிப்பு நிலையில்;



உ

கண்டிப்பு தண்டிப்பு இல்லாமல் **சாட்சி**
பாவனையில் இவ்வுலகையும், உலகஜீவர்களையும்,
அழகாகவும், ஆனந்தமாகவும், அழைத்துச்செல்
கின்றனே கண்ணன். அவனுடைய அருமை பெருமை
தெரியாமல் மனம் வசம் அகப்பட்ட மாந்தர்
குற்றம் குறை காண்கின்றனரே. தம் பால்ய லீலை
களையெல்லாம் ஒழுங்காக முடித்துவிட்டு, கம்ச வதத்திற்காக
மதுராவை நோக்கி ஆனந்தமாக செல்கிறான் கண்ணன்.
எங்கும் நிறைந்த கண்ணனை, தூய வேடத்தில்
கண்டு **மயங்கி**, காட்சியால் வீழ்ச்சி ஆகி
அயர்ந்து சோர்வுறுகின்றனர். சாரதியாம் அவன் இருக்க,
ரதமாகிய எம்மிடம் குறைசொல்கிறார்களோ இது என்ன வந்தது?



13

அம்பை எய்தவன்
தம்மை மறைத்துக்
கொண்டான்:-
கண்ணன் வேஷத்தில்
இருந்தாலும், தோற்றம்:-
ஆயர் குல சிறுவன். டைய
யசோதா நந்த கோபனு
குமாரன். விளையாட்டுக்
குழந்தை விளையாடுகிறான். அறியாத
பாலகன்தானே என்ற எண்ணம்.

அம்பை எய்தவன் ஒருவன் தம்மை மறைத்துக் கொண்டு
அருகிலேயே (நம்முன்னதாகவும்) இருக்கும்போது.
அவனைக் காணாமல், (காண முயற்சிக்காமல்)
அம்பை நொந்துகொள்வது (குற்றம் சொல்வது)
அறியாமை தானே??? (மடமை தானே.)
அவனைக் காண முடியாத காரணம்?:-
எதிர் மாறியும்! காரியமற்றும் தான்.
இங்கு இவ்விரண்டும் எது என்றால்?????
(1) கண்ணன் நம்மை விட்டு பிரிகிறானே!!!
இன்னும் சிலகாலம் (நாம் மக்குப் பயமச்சமற)
நம்முடன் இருக்கலாமே? (என்ற நப்பாசை)



இதேபோல் 14

ஒவ்வொரு நாம ரூபத்துள்ளும் மறைபொருளாய் ஒளிந்திருக்கும் ஒளிபொருளாமருக்கும்

நம் பரமாத்மாவை நாம் கண்டுணர முடியாமல் இருப்பது நம் மன மடமையே. (நம் அறியாமையே)

இ வந்து, இருந்து, மாறி, மறையும்!

நாம ரூபங்களில் அளவு கடந்த பற்று.

நம் மன உறுதி! (எப்படி இருக்க வேண்டுமென்றால்?)

A திட்டமிட்ட காரியம், திட்டமிட்ட காலத்தில் தானே நடைபெறும். நடைபெற வேண்டும். அது தானே இப்பிரபஞ்ச நியதி? அதை மாற்றவோ, மறுக்கவோ, வெறுக்கவோ, விரும்பவோ, எவர்க்கும் உரிமையில்லையென உறுதியான நம்பிக்கை.

B அசையும் நிலையில் இருவரே. அசையா நிலையில் ஒன்றே. எல்லோரும் எல்லாம் நலமே. நல்லவர்களே. தீமையும் இல்லை. தீயவர்களும் இல்லை. நம் சாதனை என்னவென்றால்?

காட்சியில் வீழ்ச்சியும், எழுச்சியும் இல்லாமல் (கேள்வியிலும்)



15

விழி கண் குருடு போல; கண் இருந்தும் குருடாய் / காது இருந்தும் செவிடாய் / வாய் இருந்தும் ஊமையாய் / அடங்காமல் / அடங்கி / ஆனந்தமாய் / அதுவும் மௌனானந்தமாய் / இருப்பதுவே சாதனை.

மனதை அப்படியே விட்டுவிட்டால் அது ஜோதியே /

இதன் உட்கருத்து:— நாம, ரூப, ஜீவ, தோற்றங்களெல்லாம் மனக்கண்ணுக்கு பளிச்சென தோற்றுவதாலும்; மனவாக்கால் எல்லாம் விவகரிக்கப்படுவதனாலும்; மாயையும் மனமும் / சூட்சுமமாக இயங்குவதாலும்; மின்சாரம் போன்று ஆன்ம சைதன்யம் உள்ளும் புறமும் ஒளிர்வதாலும்;



இவ்வாறு உலகமும், பொருள்களும், ஜீவ தோற்றங்களும் இருப்புடையவைகள் போல தோன்றுகிறது.

ஆ.......... து..........வே?

ஜீவ வேஷங்கள், த்வேஷ குணங்களாக தோற்றி, வேஷம் & த்வேஷம், த்வேஷம் & வேஷம், என மாறி மாறி பின்னவிட்டு, புண்ணிய பாபமென்னும் இருவினையால் சிக்குண்டு, ஜனனம் & மரணம் என்னும் சுழலில் சுழல்கிறது. இதை அறியாத மனம் படைத்த மனிதன் மட்டும் தெய்வம் என்னை சோதிக்கிறது என்றும், பிறர் என்னை கெடுக்கிறார்கள் என்றும், மற்கவனத்தால் புதையுண்டு போய்விடுகிறான்.

ஜோ பாபா.



17

முற்பகுதி தொடர்கிறது.

(1) கண்ணனின் 5 வயதுவரை பால்ய லீலைகள்.

(2) ,, 5 T.6 வரை ராஜ கிரீடை &
ஜல ,, .

(3) ,, 6 வயதில் காளிங்க நர்த்தனம்.
புல்லாங்குழல் வேணு ராஜா வாக
மாறியது.

கண்ணனின் பசு ஓட்டும் படலம்.

(4) ,, 7 வயதில் மலையை குடையாய் தாங்கியது
8 வயதில் தான் அண்ணா பலராமனுடன்

(5) கண்ணன் மதுரா சென்று கம்சனை வதைத்து, தாத்தா உக்ரசேனனை விடுதலை செய்து, அவர் வாயிலாக தம் ஸ்ரீமாதா ஸ்ரீபிதா வான தேவகி வசுதேவரை சிறைமீட்டு, ஸ்ரீமாதாபிதாவுக்கு ஸ்ரீபாகவத சேவை சாதித்து ஆட்கொண்டான்.




ஸ்ரீமாதா ஸ்ரீபிதாவின் ஸ்ரீபாகவத சேவை :—

சிறையில் கண்ணனை கண்ட இருவரும் அதிஅதி ஆச்சர்யமும், ஆனந்தமும் அடைந்தனர். அவ்விருவரும் கண்ணனை ஆரத்தழுவி, கட்டிக் கொண்டு அழுகையும் வராமல், வரமுடியாமல் உன்மத்தம் பிடித்தவர்களாய்; மரம்போல்நின்று மூர்ச்சையாயினர்.

பின்பு தெளிந்தனர். 8 வயது சிறுவனாக இருந்தாலும்; தம் விரிந்தமார்பில் அவ்விருவரையும் தாங்கியவண்ணம், அவ்விருவரையும் குழந்தைகளாக்கி, (குழந்தை உருவங்களாக்கி) தாம் சப்பளாம் போட்டு அமர்ந்தநிலையில், அவ்விருவரின் தலைகளை தம் இரு தொடைகளிலும் வைத்து தாம் தாங்கிக்கொண்டு. அவர்கள் தலையையும் தம் இரு தடக்கைகளினாலும் நீண்ட கைகளினாலும்,





உச்சிமுதல், பாதம் வரை தடவிய வண்ணமும்

ஸ்ரீபாதசேவையும் செய்து ஆனந்தம் அடைந்தான்.

(ஸ்ரீ பாகவத)

இந்தகாட்சி எப்படி அமைந்ததென்றால்?

அன்பின் அன்னை, தம் அன்புக்குழந்தைகளிரண்டை
தம் இருதொடைகளிலும் தலை வைத்துப் படுக்கச்
செய்து, எப்படி தம் இருகரங்களாலும்
"அரவணைத்து, கொஞ்சி, குலாவி, தடவி
"ஆனந்திப்பாளோ, அப்படி அமைந்திருந்தது.

தேவகி :- கண்ணா! கார்மேகவண்ணா!
குமரக் கண்ணா! எம் அருந்தவச் சீவனே!!

உன் பாஸ்யலிகள்!





ஸ்ரீ நாரத பெருமான் வாயிலாக அனேகம் கேட்டதுண்டு. அதை உன் வாக்கால் கேட்டானந்திக்க விரும்புகிறேம்.

உன் பவளவாய் திறந்து சொல் கண்ணா!!??

எனக் கெஞ்சினாள் தேவகி

அதை ஆதியோடந்தமாக சொன்னான் கண்ணன்.

தேவகி:- இந்த தெய்வீக திருக்காட்சிகளை யாம் நேரில் காண கொடுப்பினை இல்லையே கண்ணா?

கண்ணன்:- ஓ எம்மாதா! வருந்தாதே. யாம் அடுத்து ஏழுமலையானாக ஓர் தோற்றமெடுக்க உள்ளோம். அது சமயம் யாம் உன் வளர்ப்பு மகன் ஆவோம்.



ஓர்சாதகனின் சேவை

சர்வாங்கசேவை 12 ஆண்டுகள்.

ஸத்பாவசேவை 6 ,,

ஆத்மபாவசேவை 6 ,,

சேவையின்பலன் அநுபவம் பெறுவது } 12 ,,

ஓர்சாதகனின் பொறுமையின் சகிப்பு தன்மை } 36 ,,

ஸ்ரீ பாபா.

21

அதுசமயம் எம் திருமணத்தை! நீயே முன் நின்று நடத்துவாய் மாதா! அதுசமயம் உன் நாமம் "வகுளமாலிகை" ஆகும்.

எனக்கிருபை சாதித்தான் எம் கண்ணன்.

எம் கண்ணன் 36 வயது வாலிபனாகவே 150 வயதுவரை வாழ்ந்ததாக அவன் வாயிலாக அறிகிறோம்.

தேவசிற்பி மயனால் நிர்மாணம் பண்ணப்பட்ட துவாரகை துவாரகாபுரி 100 ஆண்டுகள் ஆட்சி செய்ததாக பகவான் ஸ்ரீகண்ணன் வாயிலாக அறிகிறோம்.

ஸ்ரீ பாபா

22



# நம்பிக்கை

அவன் நாம உணர்வோடு (இறை குரு உணர்வாக)

ஜகஜீவகலக்க பய மில்லாமல்!

நாமரூப **மயக்கம்!** இல்லாமல்;

உண்டு என்றும்; முடியும் என்றும்; நடக்கும் என்றும்;

## நம்புவாயாக! (இன்பதுன்பம் இல்லை)

அவஸ்யம் முடியும். நடக்கும். ஆனந்தம் உண்டு.

## கா......ர......ண......ம்

அவன் இருப்பு! அவன் உடைமை! அவன் இயக்கம்.
அவனுக்கன்னியம் எவரும் எதுவும் இல்லை.
விளக்கம் கீழே காண்க.

23



இயக்கம் :— ஒலியாகிய சூட்சுமம் அது

நாமம் | அது இயக்கமாகிய இறை குரு நாமம்.

அது மாயாவின் சூட்சுமமாக இயங்கக்கூடியது.

வினை & விதி சம்பந்தம் கொண்டதாகும்.

உள் திட உறுதியின் நம்பிக்கையில்

வினை & விதியை | முன் பின் மாற்றவும் வலு

இழக்கவும் செய்யலாம். அழிக்க முடியாது.

இதன் தாத்பர்யம் (உட்கருத்து) நாமம்

சொந்த பந்த பாச பற்றின் எண்ணங்கள் தவிர்க்கவும்.



இறை & குரு உணர்வோடு
எண்ணங்கள்
வந்தால் அங்கு
லௌகீக எண்ணம்
வரவே வராது.
தெய்வீக & பரமார்த்தீக
எண்ணமாகத்தான் இருக்க முடியும்.
இருக்க வேண்டும். ஆகவே அங்கு மாயாவின் நினைவை
நீ பெற முடியும். ஆகவே:- எண்ணியது நடக்கும். நீ
கேட்டது கிடைக்கும்.

தெய்வீக பரமார்த்தீக எண்ணபாவனையை
பெருக்கவும். அவஸ்யம் முடியும் என உணர்க.

இதன் காரணம் :- மாயாவானது லௌகீக
எண்ணமாக இருந்தால் விஷ விதியை!
கவனித்து நடத்தும்.
தெய்வீகம் & பரமார்த்தீகமானால் ரஜோ தமோ
தோஷ குணங்களில் வாழ்தன்மையால்;
ஆனந்தத்திற்கு ஆதரவாய் இருக்கும்.

இருப்பு :- இருப்பு என்பது இங்கு இரு நிலைப் பெறும்.
ஒன்று பரிபூரண சைதன்யம் அது
சூட்சமம்! அதாவது ஸ்வயம் ஜோதி!



தான்
மனக்கண்ணைக் காணமுடியாது. அறிவுக்கண்ணால்
உணரலாம். மின்சாரம் போன்றதாகும். ஆனால்
மின்சாரம் இல்லை. இது உதாரணமே. உண்மையல்ல.
அதாவது பாலில் உள்ள வெண்ணெயையும்!
எள்ளில் உள்ள எண்ணெயையும்! இவற்றில்
கலந்த உயிரையும், எப்படிக்காண முடியாதோ?
ஆனால்?
எப்படி உண்டு என நம்ப முடியுமோ? ஆனால்
முயற்சித்தால் எப்படி
கண்டுணர முடியுமோ? அவ்விதமாகும்.



மற்றொன்று காணும் நிலையாகும்.
மனக் கண்ணால் கண்டு, அறிவுக்
கண்ணால் இதுதான் என உணர்வதுமாகும். அதாவது
பாண்டமும், மண்ணும் போன்றதாகும்.
பாண்டத்தை காணலாம். மண்ணை உண்டென உணரலாம்.
பாண்டம் தோற்றும் போது மண் தோற்றாது.
மண்ணை இருக்கும் போது பாண்டம் ,, .
அதைப் போல கண்ணால் தானாக் கூடிய இந்த
நாமரூப ஜத, ஜீவ, ஜட, கட,
படாதிகள், தாவர ஜங்கமங்களாகு




நாமரூபமனைத்தும் ௨௭
நாசமாகுமென்றால்
எவ்வாம் மறைந்து விடும்

அவைகளை உண்டு என நம்பும்
மனம் இராது என அறிக
இல்லையென்ற ஆனந்தத்தில்
கரைந்து விடும் என அறிக

தோற்றும் போது, எவ்வாம் மண்ணை

தாண முடியாது. எல்லாம்மண் தானே
காரணம் நாமரூபமயக்கம்.
என மெய்யறிவால் உணர்ந்து விட்டால்,
நாமரூபமயக்கம் நாசமாகும்.
மேலி
நாமரூப ஜக ஜீவ தோற்றமனைத்தும் அச்சாடினை

அதாவது குணதோடமனைத்தும்
சூரியனைக்கண்ட பனிபோல்சர்வநாசமாகும்.

நாமரூப ஜக ஜீவ தோற்றமனைத்தும் சர்வநாசம் ஆகும் என்று

நாமரூப களாங்க தவக்க மயக்க பயமனைத்தும்
கானல் ஜல மென அச்சாடினைமே கண்டுகொள்ளலாம் என அறிக



நேருக்கு நேர்
காண்பதிலும்
ஒருவரோடொருவர்
சொல்லியும், கேட்டும்,
விளக்கம் பெறுவதிலும் (1)
அவரவர் வினைக்கு விதியும்
இங்கு கவர்ந்து விடுவதிலும்

(1) நாம ரூபம் வலுப்பெறுகிறது
உண்மையாகிறது.
(2) நடைபெறும் சம்பவம்
(3) ஜகஜீவ தோற்றம் நித்திய சத்தியமாய் தோற்றுகிறது.

நேருக்குநேர் காண்பதனையும்
ஒருவரோடொருவர்
சொல்லியும் கேட்டும் விளக்கம் பெறுவதிலும்
நம்முன் தோன்றி, இருந்து, மாறி, மறையும்
இந்த இல்லாத உலகம் இருப்புடையது போல் தோற்றுகிறது.
காண்பதிலும், கேட்பதிலும், அதுபற்றி பேசுவதிலும் மயங்கிய மனமானது
உலகம் பொய்யென உணர முடிவதில்லை. உணர
முயற்சிப்பதுமில்லை.

காண்பதிலும் கேட்பதிலும் பேசுவதிலும்
அத்தனை சுவை மயக்கமே.



இவைகள் நாசமாகும்:—

எல்லாம் ஒருவனே. 29

" ஒருவன் யாருமே.

" " செயலே.

அவனன்றி அணுவும் அசையாது

என நாமரூபம் அசையும் நிலையில்

இருப்பு நிலையாக எல்லாம் உருவம்

ஒன்றே. அதுவே யாவும் யாவுமே அது.

என்றும் ஸ்வய அனுபவத்திலேயே யாவும் யாமாகவே

இருக்கிறோம் என்ற உறுதி நிச்சயம் வேண்டும்.

ஒருமுறை ஒரே ஒருமுறை

மட்டும் உலகம் பொய்யென உணர்ந்து விட்டால் போதும்.

மறுமுறை நீ நூறு அல்ல ஆயிரம் தடவை எண்ணினாலும்

நாமரூபமாக

உன்னால் ↑ எண்ண முடியாது. எண்ண மனமிராது.

பொய்யை பொய்யென்றறியும் போதத்திற்கு

ரீ (உறுதிக்கு)

ஆதரவு உண்மையிலே ↑ என்றே விளம்பாய் பராபரமே?

என்றார்கள் ஸ்ரீ மஹான்கள். அதாவது!

30



உன் பிரார்த்தனை

↑ உண்மையை தலைவணங்கி ஏற்றுக்கொண்டு;

பொய்யை திட வைராக்கிய அறிவால்!!!
பொய்யென் < இல்லையென தள்ள்

இறை & குரு உணர்விலே தன்னை

உன் பரிபூரண கிருபை வேண்டும் ஐயனே!

அவன் அருளால் அவன் தாள் வணங்கி

என்ற நிலை வர வேண்டும்.

இதன் ரகஸ்யம் என்னவென்றால்?

சப்தம்.

காண்பது, உருவம். கேட்பது ஓசை

இவை இரண்டையும் வைத்து பேசி முடிவெடுப்பது

வாக்கு வார்த்தை. இவ்வார்த்தை ஊகத்திலே

வருவதேயன்றி, உண்மையல்ல.

இதுவேயே



உ

நல்ல அர்த்தங்கள் அனர்த்தமாகிவிடுகிறது என்றால் :-

சந்தேகம், களங்கம், கலக்கம், பயபீதி என்ற இந்த நான்கிலும் தோன்றும் அனர்த்த பாவனையாகும்.

கற்பனையின் அர்த்த

நல்ல அர்த்தங்கள் அனர்த்தம் ஆகிவிடுகிறது.

பொய்யே மெய்யாய் பிரகாசிக்கிறது என உணர்க. ஆனால் மெய்யல்ல.

மெய் என்பது மாறாமல், மறையாமல், (ஸத்தியம் என்பது) இருக்கிறது என்ற ஓர் இருப்புத் தன்மையோடு கூடியதாகும்.

மனஉலகத்தில் வரும் கற்பனையை தள்ள வேண்டும்.

அவன் அருளாலேயே அவன் தாளை வணங்க வேண்டும் (வணங்க முடியும்) என்ற நிலையில், எல்லாம் அவனே என்றும், எல்லாம் அதே (அதுவே) அந்த ஒன்றே என்ற ஓர்மையை திடப்படுத்தி நம்பிக்கையின், வைராக்கியத் தார்ஸ்திரம் வேண்டும் என இறை நிறைவு செய்கிறோம்.



ஒரு கேள்வி:- ஹே அன்பான ஸ்வாமிஜீ தாங்களின் வெளிநாடு பயணம் எப்படி இருந்தது? தாங்கள் உடல் அதை ஏற்றுக் கொண்டதா? சிரமம் ஏதுமில்லையே?

வைத்தியம்:- (சிரித்துக் கொண்டே) வெளிநாடா? அப்படியானால் தாங்கள் உள்ளே நாடவில்லையா? உள்ளே நாடிவிட்டால் வெளிநாடு என்ற வெளி நாட்டமெல்லாம் தானே மறைந்துவிடுமே!!! வெளிநாட்டினில் நாட்டத்தினை பட்டது போதாதா? உள்ளே செல்லுங்கள் ஐயா!!!

## ஒரு கேள்வி



33

கேள்வி :– உள்ளே செல்ல என்றால் புரியவில்லையே சற்று விளக்கம் கொடுங்கள் கேட்போம்?

வைத்தியம் :– நாம ரூப ஜகம் & ஜீவர்களாக காண்பதும், கேட்பதும், அது பற்றி பேசுவதும்! வெளி நாடாகும். வெளிநாட்டமாகும்

எல்லாம் ஒருவனே! எல்லாம் ஒன்றே என காண்பதும் / கேட்பதும் / அது பற்றி பேசுவதும் உள் நாடாகும். உள்ளே செல்லும் நாட்டமாகும்

அந்த நாமமே மயக்கமெல்லாம் போதுமையா!

அவர் உள்ளே சென்றார். உள்நாட்டமானார். வெளிநாடு வெளிநாட்டம் மயக்கம் நாசமானது.



நாமரூபமனைத்தும் (34)
கல்லும் மண்ணே
என கண்டுணர்ந்தால்
நாடும் வீடும் நாசமாகும்
ஒருவனின் இயக்கமே ஒன்றி
இருப்பே என உணர்
ந்தால் காலம் நாசமாகும்
பாஷை என்ற வார்த்தைகளின் உண்மையும் வெளியாகும்
ஓசை ஒலி அலை ஸ்பர்த்தார்த்தமே அர்த்தத்தை எப்படி
அறிய முடியும்? இங்கு அனர்த்தம் நாசமாகும்.

இதன் சுருக்க விளக்கம்.

நாடு, காலம், பாஷை! இவைதானே உன் மனக்குழப்பம் ஆகிறது. அதாவது அந்த நாடு சென்றோம். இந்த காலத்தில் அங்கு இருந்தோம். இந்த இந்த பாஷைகள் அங்கு பேசப்படுகிறது. என வெளிமயக்கத்தில் புலம்புகிறாயே!!!

நாடு ஏது? அங்கு சென்றோம் என்ற காலம் தான் ஏது? ஆங்காங்கு பேசும் பாஷைகள் தான் ஏது? எங்கெங்கு எதனை கண்டாலும் **கல்லும் மண்ணும்** தானே? இதை நாடு என்கிறாய்.

கண்ணை திறந்தால் காலம் உண்டு. தோற்றத்திற்கு உரிய காலம். கண்ணை மூடினால் காலம் இல்லை. தோற்றம் இல்லை.

புரியவில்லையா? **கற்பனை**யை விரிப்பது காலம்.

## ஒரு கேள்வி

35



ஒருவன் செயலே! ஒன்றின் இருப்பே

எனை மனக் கற்பனையை நாசம்செய் நாவு காவல் இல்லை.

எந்த பாஷையானாலும் ஓசை கள் தானே.

அதாவது ஒலிஅலைகள்தானே? சப்தார்த்தம்தானே?

அதன் அர்த்தமும்! அதன் அனர்த்தமும்! உன் மனக்

கற்பனைதானே? அம்மனக் கற்பனையை நாசம் செய்வ
தென்றால்?

எல்லாம் நலமே! எல்லோரும் நல்லவர்களே! என்ற

ஓர்மையின் பாவனை வேண்டும் நாமும்! காவலும்!
பாஷையும்! நாசமாகும்.

இவைகளை விரித்து விரித்து என்ன பலனைக் கண்டாய்?
ஒடுக்கி ஒடுக்கி உள் நோக்கிச் செல் கொழுந்தே!!
அதுவே ஆனந்தமாய்! அகண்டானந்தமாய்! எங்கும்!
எதிலும்! எவ்வாவற்றிலும் உன்னை உணரலாம். -அம்மா



ஓர் ஸ்ரீ மஹாத்மாவின் கேள்வி:— அன்பே உருவான பாபா! ஸ்வய ஞானுபவ பாடல்களில் 98வது பாடலுக்கு மட்டும் அத்துறுபவ விளக்கம் தேவையா பாபா?

வைத்தியம்:— ஹே மஹாத்மா! அனேகமுறை அனேக மடல்களில் விளக்கம் கொடுத்திருக்கிறோமே போதாதா?

ஸ்ரீமஹாத்மா:— போதாது! போதவே போதாது!! அத்தனை பாடல்களுமே அந்தாதி தொகுப்பைப் போல்! உயர் ஒளி பொருந்திய மாணிக்கங்களாகும் பாபா. படிக்கப் படிக்கத் திகட்டேன் என்கிறதே பாபா!!!

ஓர் முமூட்சுக்கு ஸ்வயஞானுபவ நூல் ஒன்றே போதும் பாபா.

மற்றும் அனைத்து வேதாந்த நூல்களும் "இம்மணியை" மூடியிருக்கும் உமிகளாகும் பாபா.

## ௧௮வது பாடலுக்கு விளக்கம்



௧௭

உமிதேனா நீக்காமல் **மணியை** அடைய முடியாது பாபா. மணியை அடையாமல் உண்ண
,, ,, . உண்ணாமல் உறங்க முடியாது பாபா.

**அவ்** உறக்கம் இல்லாமல் ஹரிதுயில் இல்லாமல் பிறந்த பிறவிப்பயனை அடைய முடியாது பாபா.

வைத்தியம் இடைமறித்தது.

வைத்தியம்:- பொறுங்கள்/ பொறுங்கள்// மஹாத்மா. அந்தபாடலில் நாங்கள் அறிவை தட்டி எழுப்பிய உட்கருத்து என்ன மஹாத்மா?

ஸ்ரீமஹாத்மா:- அப்படிக் கேளுங்கள் பாபா.

௧வது வரியில்:- பரமசிவம் கருணையில் வர வெறும் மூடர்க்கு, எனவருகிறது.

௨வது வரியில்:- அகண்ட பரசிவ கருணையை அடைய வேண்டும் எனவருகிறது.



யாவையுமே பிரம்ம
மெனதெரிவதில்லை
உதாரணம் :- 38
மண்ணை

தெரிவதில்லை பாண்ட
ங்களாகவே தெரிகிறது!

காரணம் :- நாமரூபமாக கண்ணும் கேட்கும்
பேசிய பழக்கவழக்க தோஷமாகும். மண்ணை
ஆனதே பாண்டம் என அறிந்தால் போதும்.

ஸ்ரீமஹாத்மா :- பாபா! பாபா!! அவ்விரண்டு
வரிகள் மட்டும் ஏன் சொல்ல வேண்டும்???
அப்பாடல் முழுவதுமே சொல்லிவிடுகிறேனே.

வைத்தியம் :- அவர் ஆர்வத்தையும்! அறிய
வேண்டும் என்ற ஏக்கத்தையும் உள்உணர்வையும்!
கண்டு வெகுவாக ஆனந்தித்தது. சொல்லுங்கள்
மஹாத்மா கேட்போம்.

(98) ஸ்ரீமஹாத்மா ராகம் போட்டு பாடினார்.

சர்வமுமே பிரம்மமெனப் போதித்தாலும்;
சந்ததமும் சுருதிமுடி படிப்புற்றாலும்;
பரமசிவம் கருணையில்லா வெறும் பேர்க்கு;
பலகால வாதனையால் மீண்டும், மீண்டும்;
இருமையென இதயத்தில் தெரிவதன்றி;
யாவையுமே பிரம்மமெனத் தெரிவதில்லை.
(எம்) அரியமனே ஆதலினால் முமுட்சு வெல்லாம்;
அகண்டபரசிவகருணை அடைய வேண்டும்.
இதுதான் அப்பாடலாகும் பாபா.

## 98வது பாடலுக்கு விளக்கம்




வைத்தியம் :- ஹேமஹாத்மா! தாங்கள் பாடியது பிரம்மானந்த சுவையாய் இருக்கிறது. பொருளை உணர்ந்து உமது சொற்கள் வரும்போது, எம் ஸ்ரீ ரிபு மஹாத்மா! பாடியது போல் இருக்கிறது.

ஸ்ரீ மஹாத்மா :- பொறுங்கள்! பொறுங்கள்!! பாபா! போதும்! போதும் பாபா!! தாங்கள் பாடும்போது, அப்பர ஒளியில் நாங்கள் எல்லாம் ஆழ்ந்து கரைந்து விடுகிறோம் பாபா!

வைத்தியம் :- பொறுங்கள் மஹாத்மா! இப்பாடலில் தாங்களுக்கு எந்த இடத்தில் விளக்கம் தேவை?

ஸ்ரீ மஹாத்மா :- பரமசிவம் கருணை வேறு! அகண்ட பரசிவ கருணை வேறு??

வைத்தியம் :- பாடல் விளக்க நிமித்தமாக சொல்லும்போது இரண்டும் வேறு வேறுதான்.



உள் உணர்வோடு ஒன்றி உணரும் போது, இரண்டும் ஒன்றே! மஹாத்மா!

ஸ்ரீமஹாத்மா :- சற்று விளக்கம் கொடுங்கள் கேட்போம்??

வைத்தியம் :- விளக்க நிமித்தமாக சொல்லும் போது பரசிவம் வேறு பரமசிவம் வேறு தான்.

பரசிவம் என்பது பரநிலையை குறிக்கிறது என்றும், பரமசிவம் " ஈசன் நிலையாகிய இறைநிலையை குறிக்கும் என உணர்க. அதேபோல் சிவம் :- பரநிலை! சிவன் :- இறை நிலையாகும் எனவும் உணர்க.

மேலும் ஸ்ரீமத்ரிபுகீதையில் வரும் வாக்கு எல்லாமே

18வது பாடலுக்கு விளக்கம்




சிவன்! சிவன்!! என்றே வரும். அவைகளை எம்
ஸ்ரீகுருதேவரும்! எம் கண்ண பரமாத்மாவும்!
பிரித்தெடுத்து எழுதும் போதே, பரநிலை
அனுபவம் பெறும் நிலைக்காக,

**சிவன்** என்பதையெல்லாம் **சிவம்**! என
மாற்றிவிட்டார்கள் என உணர்க.

இறைநிலையை மாற்றி, பரநிலையாகவே எழுதியது
தெய்வ நிந்தனையல்லவா? என கேட்கத் தோணும்.
அது தெய்வ நிந்தனையல்ல. தெய்வ உபசாரம் ஆகும்.
எப்படி என்றால் :- தெய்வத்தை **நாமாக்கி**!
அதாவது நமக்குள்ளாக்கி தெய்வத்துள் நாமாகி

42



அதாவது தெய்வீக குணாதிசயங்களை பெற்ற,

" குணுபவங்கள் "

பெற்று நாமே ஸ்ரீபகவானாகி ஸ்ரீபகவானே நாமாகும் நிலை பெற வேண்டும்.

குறிப்பு :- தெய்வீக குணாதிசயங்கள் :-

ஸ்ரீபகவானின் மாயா அபூர்வ சக்திகளாகும்.

தெய்வீக குணுயவங்கள் :- ஸ்ரீபகவானின் ஸாந்தி ஸத்வ குணம் (ஏககுணம்) இதுவே ஸ்ரீபகவானின் நிலை. இது தெய்வநடத்தையல்ல. தெய்வஸ்வரூபம் ஆகும்.

ஸ்ரீமஹாத்மா :- தெளிந்த விளக்கம் வெகுவெகு அபூர்வமே. வெகுவெகு ஆனந்தமே பாபா. இனி பாடலின் விளக்கத்தை எம் சிற்றறிவுக்கு எட்டும் நிலையில் அமைய வேண்டும் பாபா.



43

தெய்வம் மனுஷ்யாணம்:-
ஸ்ரீ பகவான் வாக்கு:-
ஓம் அம்ஸ ஸ்வரூபம்
உ மனித வடிவமே என்கிறான் எம் கண்ணன்.

வைத்தியம்:- நல் வது மஹாத்மா. பர ஒலியாகவே வெளிவருகிறது. சிரத்தையுடன் கேளுங்கள் மஹாத்மா.

ஸ்ரீமஹாத்மா:- பர ஒலி ஒலிக்கிறது என்கிறீர் பர ஒலிதான் என நம்புவது எவ்வாறு பா?

வைத்தியம்:- தெய்வம் மனுஷ்யாணம் என்ற வாக்கியத்தை எப்படி நம்புகிறீர் மஹாத்மா? அவ்வாறுதான். அதாவது இக்கலியில் தெய்வம் நேரில் தோன்றாது என்றும் மனித வடிவில்தான் தோன்றும். என்றும் உம் போன்ற ஸ்ரீமஹான்களின் அனுபவமாக இருக்கிறது.

அவர் இடைமறித்தார்: யாம் தான் என்று தாங்களுக்கு கிடைத்தோமா பாபா?



யாரைக்கண்டாலும் அவரை ஆ மஹாத்மாக்கள்
பட்டியலில் சேர்த்துவிடுகிறீர்கள். அதையும்
நாங்கள் மறக்கவும் | மறக்கவும்!
முடியவில்லை. அது எப்படி இருக்கிறது என்றால்?
வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம்!
கிடைத்தது போல் ஆகிவிடுகிறது. இப்போது
வைத்தியம் இடைமறித்தது. பெரியவர்கள்
மஹாத்மா! அவ்வாக்கியத்தை நிறைவு செய்து
விடுகிறேன். யாம் சொன்ன கடைசி வாக்கு என்ன??
ஸ்ரீமஹாத்மா:- தெய்வம் மனுஷ்ய ரூபேண என்ற நியதியில்
தெய்வம் மனித வடிவில் தான் தோன்றும். அது
நேரில் தோன்றுவது என்கிறீர்கள். எந்நிலையிலும்
வைத்தியம்:- அதைப்போல் பர ஒலியும் து.
ஏககாலத்தும் பிரத்தியக்ஷமாக நேரில் ஒலிக்க



ஸ்பீக்கர் நிலையால் மனிதே
வடிவில் தான் ஒலிக்கும். மற்றைய மூன்று யுகங்களிலும்.
ஆகாயத்திலிருந்து ஓம் ஒலிக்கும்!
அத்துடன் கேள்வியின் பதிலும் தொனிக்கும் ஒலிக்கும்
அதை இந்த அர்த்தம் தான் விதிவு என என உணரவும் முடியும்.

ஸ்ரீமஹாத்மா:— இத்வாக்கை இறை பரம் வாக்காக ஏற்றுக் கொள்கிறேம் பாபா.

இனி விளக்கம் தொடரவாம் பாபா.

வைத்தியம்:— இந்த ஒன்றை அவஸ்யம் அனைவரும் வைத்தியமாக உணர வேண்டும். இக்கலியில் மனிதனை பிறந்து முழேட்சு ஆக வேண்டியவர்களும்



ஈசன் கருணையை பெறுவதென்றால்: → 46

நான் அல்ல. நீ. என்னால் அல்ல உன்னால். என்னுடையதல்ல. உன்னுடையது. அவனன்றி அணுவும் அசையாது என அஹங்காரமும் மமகாரமும் நாசமானால் போதும் மறுவினாடியே ஈசன் கருணையை பெற முடியும்.

எவரொருவரும் ஒவ்வொருவரும் வினைவிதி சம்பந்தம் கொண்டவர்களேயாவர். ஆகவே நாமரூப சம்பந்தம் கொண்ட ஓர் இறைவனிடம் **சரண்** அடைந்தே ஆகவேண்டும். அப்போதுதான் வினைவிதியிலிருந்து தப்பிக்க முடியும்.

ஆகவே **பரமசிவனாகிய** ஈசன் கருணையை பெற வேண்டும். ஈசனாகிய பரமசிவன் கிருபை பெறுதவர்களுக்கு **முக்தி** முக்காலத்திலும் எக்காலத்திலும் இவ்வே எம்பெரு சத்தியம்.

இதன் **காரணம்?**



47

பிரம்மம் ஸத்தியம். ஜகத்மித்தையென

ஓர் மாணவனுக்கு ஓர் குருவானவர்:-

சகலமும் பிரம்மமயம் என எத்தனை முறை
போதித்தாலும்; சர்வசதா ஸாஸ்திரம்/
வேதம்/ வேதாந்தம்/ உபநிஷதங்கள்/
பிரம்ம சூஸ்திரம்/ மற்றும் சுத்த அத்வைத நூல்கள்
என ஆயிரக்கணக்கில் **போதனை** செய்தாலும்
இக்கலியுகத்தில் மட்டும்
அம்மாணவனும் சிரத்தையுடன் பாடம் கேட்டாலும்;
இறை கருணை யென்ற ஈசன் கருணையை/
பெறு விட்டால்!!!

**"துவைதபயமாகிய"** இருமைகள்
சாமான்யமாக விலகி நாசமாகாது என உணர்க.

இதன் **காரணம்?**



பற் பல ஜன்மங்களாக **நான் எனது** அடைந்த பழக்க (பேச்சு) வழக்க (செய்கை) தோஷ குணங்களில், பெற்ற **வினை விதி**யால் தொடர்ந்த கர்ம, பந்த, வினையானது ஈசன் சிருஷ்டியை தனதாக பாவித்து செய்து வந்த தோஷம் சாமான்யமாக அறியா தன்மையாலும்; நாம ரூப ஜனன மரணத்தை கொடுத்துக் கொண்டே இருக்கும். ஆகவே ஈசனிடம் **சரண்** புகாமல் **மன** இருமைகள் ஒழியாது என்பதே சத்தியம்.

குறிப்பு :- மாயா வினால் மனம் ரசிக்கப் படாமல், மனதிற்கு வடிவு காலம் இல்லை. மனம் பொருந்தியாகாது. அதாவது மனம் அறிவாகாது. மனம் அறிவானால் தான், அறிவு பேரறிவு ஆக முடியும். அதாவது பிரம்மார்ப்பணத்தால் ஜீவன் முக்தி பெற முடியும்.

## 18வது பாடலுக்கு விளக்கம்



அடைய வேண்டும் 49

பெற

என்பதன் பொருள்

சம்சார சாகரத்தின்

கரையை தாண்ட வேண்டுமே

யன்றி அது பெறுவதல்ல.

பிறவிப் பெருங்கடலை கடக்க

வேண்டும். அப்படி கடக்கும் நிலையே

ஜீவன் முக்தியாகும் என உணர்க.

முதலில் ஸ்ரீபு மஹாத்மா சொல்வதாவது:-

அரியவனே ஆதலினால் முமுட்சு பெறலாம்;

அகண்டபர சிவகருணையை அடைய வேண்டும்

என்றோ தவிர பெற வேண்டுமென சொல்லவில்லை.

அது பெறக்கூடியதல்ல என்றும்;

அடையகூடியதென்றும் கூறுகிறார்.

அப்படியானால் இதன் பொருள் என்ன என உணர்ந்தால்

பரம்சிவம் (ஈசன்) கருணையை பெற வேண்டும் என்றும்,

பெற்ற மறு நொடியே ஸ்ரீஸத்குரு கருணையினால்;

அவர் அருளும் பிரம்மார்ப்பணத்தால் அகண்டபர

சிவகருணையை அடைந்துவிடுவோம் என்றும்.

அடைந்து விட்டோம் என கூறாத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மஹாத்மா.

பாபா



# ௫௦ பக்தி

பஜகோவிந்தம்; பஜகோவிந்தம்;
கோவிந்தம் பஜ மூடமதே! என்றார்.

அதாவது,
கோவிந்தனை பஜி! கோவிந்தனை பஜி!! கோவிந்தனை சரண் அடைவாய் மூட மனமே! என்றார்.

கருத்து:— கோவிந்தன் = ஓர் மூர்த்தி ஆகும்.
கோவிந்தம் = பசுவாகிய ஜீவன் மீது கொண்டுள்ள பாசம்! அகற்றும் ஸ்ரீபாதாரவிந்தம் ஆகும்.
ஸ்ரீபத அரவிந்

ஆகவே கோவிந்தனை ஒவ்வொருவினடியும் நினைப்பாயாக.

அவன் பாதார விந்தத்தை சரண் அடைவாயாக.

எப்படி என்றால்:— என்ன கிடைக்கும்???

அவனை நினைத்தால் என்ன நடக்கும்??? எதை அடைவோம்???



ஸத்தியவாக்கை
ஸத்தியம் பேசு.
தர்மம் செய். 51
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்"

இப்படி செய்வதால் என்ன பயன்?

ஏன் இவ்விதம் செய்கிறோம்???

இதற்கு முன் யார்? யார்?? செய்தார்கள்???

என்ன கதி அடைந்தார்கள்????? புதமுக்தியா?

பர
நாம் என்ன ஆவோம்? ஏது ஆவோம்?

ஏன மனக் கணக்கு விசாரணை செய்யாமல்;

மேட்டுத்தனமாக முட்டாள்தனமாக;

அவனை
மனதைக் கொண்டே நினைப்பாயாக. மனதைக் கொண்டே பாதாரவிந்தத்தில் சரண் புகுவாயாக.



இறை & குரு 52

நாமாவை நம்பும் நேயரால்
முழு மூடனாகவும்
வடிகட்டின முட்டாளாகவும்
முழு பைத்தியமாகவும் இருக்க வேண்டும். காரணம்?:-

நீங்க கதி ஆவாயாக. ஞ் கதி அடையாயாக.

ஏன்? எப்படி? எதற்கு? என கற்பனை செய்தால்

பல் பல சந்தேகத்தால்; பற்று பவ

தோஷ குணங்களால் மனம் இருள் அடையும்.

மனம் அறிவாகாது. மனம் ஆனந்தம் அடையாது.

மனதின் பயந்த கற்பனைக்கு எல்லையே இல்லை.

மனம் உருகி, கண்ணீர் பெருகிட, ஏக்க உணர்வால்

சில நிமிஷங்கள் நினைத்தாலும் போதும். உன்னை

யல்லால் வேறு கதியில்லை ஐயனே என சரண் புகுந்தால் போதும்.



53

அவன் என்றால் இறைவனாகும். அது என்றால் ஸத்குருவையும் பரத்தையும் குறிக்கும். இவ்விரண்டும் மனம் / வாக்கு / காயத்திற்கு அப்பால் பட்டதாகும். ஆகவே மேலே கூறிய நிலையில் நம்பிக்கை வேண்டும்.

# உன் பவன் அவன் அறிவான்.

உன் பவன் உன் மனம் அறியாது. அறியத் தேவையில்லை.

ஆனால் ஆனந்தம் உன் மனம் உணர்வதை நீ அறியலாம்.

பின் அறிவினால் பேரானந்தம் அடைவாய்.

" பேரறிவினால் பிரம்மானந்தம் என்னும்,

அகண்டானந்தம் உன் ஸத்குருவால் நீ அடைவாய்.

உன் **மனதால்** மனச்சாட்சியால்

" **மனதை** நீ கேட்டுப்பார் ???



ஒவ்வொருஜன் 54
மாவிலும், கரு
வறைமூலமாக
பிறக்கிறோம் பின் விதிவசத்தால்
இறக்கிறோம். ஆனாலும் இவை
வினை & விதி & மாயாவின்
நடைமுறையென்றால் நாம் அறிய
முடியவில்லை. அறியவும் தேவையில்லை. ஆகவே
இறை & குருவை நம்பு. முழுமையாக சரணடை.
நீ பிறந்த பிறவிப் பயனை அடைவாய்.

எத்தனை அன்னை? எத்தனை தந்தை? எத்தனை
மக்களையா? அத்தனை பிறவியிலும்
(பிறந்து இறந்து, இறந்து பிறந்து)
பிறந்திருக்கோம். போதும் போதுமையா!
இறந்திருக்கோம்

என உருகி உருகி, உருகி உருகிப் பாடுகிறாய்.
உன் உருக்கம் உண்மையான உருக்கமல்லவா?

உண்மையான உருக்கமாக இருந்தால் ஆனந்தம் மிளிரும்

உன்னிடம் தோன்றும் ஆனந்தத்தை
"நீ தான் உணர முடியும். ருசியை சுவைத்து நீயே
உணர்வது போல்" அந்த உணர்வைப்படி இருக்கு மென்றால்?

சாந்த நாம ரூபமயக்கமும் இராது.
அதுவைத்தியம்.



கோவிந்தன் & விந்தன் :- (55)

பசு & பாசத் தன்மையை நாசம் செய்யும் இறைவன் முநிறைன்று :- கருணையோடு நம்பும் மெய்யன்பர்களின் ஆதாரமாகவும் / ஆதரவாகவும் தம் பாதத்தை சுட்டிக்காட்டி யாம் இருக்க பயம் வேண்டாம் என அபயமளிக்கும் கொடுப்பது பாதம் ஆகும்.

84 லக்ஷம் ஜீவ கோடிகளின் கருவறை

சிறை வாசமும் (இதுவரை) போதாதா? இன்னமும் வேண்டுமா???

ஆ... க...வே?

கோவிந்தன் நீ!!! விந்தனின்

பாதாரவிந்தத்தில் சரண் புகுவாயாக.

ஒவ்வொரு மனித (ஆண்/பெண்) ஜீவனுக்கும் பணமும் & பகட்டும் (அழகும்) இடையிலே வந்து போகும் வாலிபம் வரைதான்.

அதாவது 16 வயது வரை அறியாமையின் பருவம்.

20 To 50 வயது வரை வாலிபம் என்ற துடி துடிப்பு ஆகும்.

50 To 70 ,, ,, வரவர தளர்ச்சி, சோர்வு, அயர்வு. முதிர்ச்சி

70 To 80 ,, ,, எதுவும் செய்ய முடியாத இயலாத்தன்மை.



உன் உருக்கம் (56)
உண்மையான
உருக்கமல்ல
என்றதும் சோர்ந்துவிடாதே.
உண்மையான உருக்கம் தான்
மேலும் மேலும் ஊக்கமும் ஏக்கமும் உருக்கமும் அந்த
ஆனந்தமும் பெருகவே அவ்வாறு சொன்னேன். இந்த
ரஹஸ்யமன்னிக்கவும். உண்மையானவை உருக்கம் என்னிடம் உண்டு.

இருமை அழகோடும். இளையபாரு. அழகு யாவும் அழியபார்.

"வாலிபம்" எனச் சொல்லும் 30 ஆண்டுகளில்

# காமம் & காஞ்சனம்!

(பெண் ஆசை) (பொன்/பணம்/பொருள் ஆசை.)

# க......டு......ம்......சி! யிருக்கு,

நாம் ஏன் பிறந்தோம்? என்பதை உணராமல்,
மண், பொன், பெண்! மயக்கத்திலே இருந்து,
கண்கெட்ட மாட்டது போல் கலங்கிறோம் பூரணமே!! என
ஸ்ரீ மஹான்கள் கூறியபடி **வீண்** அலைச்சல் தானே!
என்ன செய்கிறோம்? என்ன செய்ய வேண்டும்?? என்பதை
அறியாமல் நாய் போலும்! பேய் போலும்!! சுற்றி சுற்றி
செக்குமாடு போல் அலைகின்றோமே!!!

57



